

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு

## இந்த வினாப்புத்தகம்

## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: |
|---|
| |

Register Number: | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்
## Part-A- General Tamil
## 11 ஆம் வகுப்பு – பாடம் – 1, 2, 3, 4

வினாக்கள் : 1 - 100 மொத்த மதிப்பெண்கள் : 150
Questions : 1 - 100 Total Marks : 150

1. நன்னூல் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது சரி?
   1. இது கிபி 12ம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும்.
   2. இது தொல்காப்பியத்தை முதல் நூலாக கொண்ட வழிநூல் ஆகும்.
   3. சீயகங்கன் என்ற சிற்றரசன் கேட்டுக்கொண்டதால் பவணந்தி முனிவர் இந்த நூலை இயற்றினார்.
   4. இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டது.

   (A) 1,2,3
   (B) 1,4
   (C) 2,3
   (D) 2,3,4

2. கீழ்க்கண்ட வாக்கியங்களில் எது தவறு?
   (A) கவிதையை பேசுவது போல் எழுதுவது தான் உத்தமம் - பாரதியார்
   (B) மொழி என்ற ஒன்று பிறந்தவுடன் ‘ உலகம் ‘ என்பதும் ‘ நான்’ என்பதும் தனித்தனியாக பிரிந்து தங்களை தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன - எர்னஸ்ட் காசிரர்
   (C) எனக்கு மொழி என்பது அறிமுகம் ஆவதற்கு முன்னால் பொருள்களும் விலங்குகளும் பறவைகளும் நிலவும் சூரியனும் இருந்திருக்கவே இல்லை - ஆற்றூர் ரவி வர்மா
   (D) மேற்கண்ட எதுவுமில்லை

3. இந்திரன் தொடர்பான பின்வரும் தகவல்களில் பொருந்தாதது எது/ எவை?
   1. இயற்பெயர் - இராஜேந்திரன்
   2. மொழிபெயர்ப்பு- வங்க மொழிக் கவிஞர் மனோரமா பிஸ்வாஸின் நூல்
   3. மொழிபெயர்ப்பு நூலுக்கு சாகித்ய அகாடமி விருது - 2011
   4. இதழ்கள் - வெளிச்சம், ஆயக்கலை

   (A) 1,2
   (B) 2,4
   (C) 1,3
   (D) 4 மட்டும்

4. பின்வருவனவற்றில் எத்தனை இணைகள் தவறன்று?

1. புதுக்கவிதை இயக்கம் - வால்ட் விட்மன்
2. கவிதைகளில் குறியீடு - ஸ்டெஃபான் மல்லார்மே
3. புல்லின் இதழ்கள் - பாப்லோ நெருடா

(A) 1
(B) 2
(C) 3
(D) எதுவுமில்லை

5. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : நன்னூலுக்கு முதல் உரை எழுதியவர் விசாகப்பெருமாள்.
கூற்று 2 : நன்னூலின் முதல் பதிப்பானது 1834ல் மேற்கொள்ளப்பட்டது.
மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரி

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1,2
(D) இரண்டுமில்லை

6. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி.

1. சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகையில் ஒன்று ஐங்குறுநூறு ஆகும்.
2. இது ஐவகை நிலத்திற்கும் ஒவ்வொரு நூறு பாடலாக ஐந்து நூறு பாடல்கள் கொண்டது.
3. இந்நூலில் பனியும் பனி சார்ந்த நிலத்திற்கும் பாடல்கள் சில உள்ளன.

மேற்கண்ட வாக்கியங்களில் எது/எவை சரி?

(A) 1,2,3
(B) 2,3
(C) 1,3
(D) 1,2

7. பின்வரும் தகவல்களில் எது சரியாக பொருந்தியுள்ளது ?

(A) திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் - தமிழ்ப்பாவை
(B) இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் - திவாகர நிகண்டு
(C) தமிழ் என்னும் சொல் பாட்டு எனும் பொருளில் ஆளப்படுகிறது- தேவாரம்
(D) தமிழ் இவை பத்துமே என்று கூறியவர்- நாவுக்கரசர்

8. வேர்ச்சொல் அறிக : தவறானது எது?
   1. பாடினாள் - பாடு
   2. பேசமாட்டாள் - பேசு
   3. வந்தனர் - வந்து
   4. தந்தார்கள் - தந்த

(A) 2 மட்டும்
(B) 3,4
(C) 1,4
(D) எதுவுமில்லை

9. பின்வரும் தகவல்களை ஆராய்க.
   1. திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ஜி யு போப்.
   2. ஒரு காலத்தில் பிரெஞ்சு ராஜ்ஜியத்தை சூரியன் மறையாத ராஜ்ஜியம் என்று அழைத்தார்கள்.
   3. பனியும் பனி சார்ந்த நிலமும், ஆறாம் திணையாக கருதப்படுகிறது

மேலே உள்ள தகவல்களில் எது தவறு?

(A) 1 மட்டும்
(B) 1,2
(C) 2 மட்டும்
(D) 3 மட்டும்

10. கீழ்க்கண்ட வாக்கியங்களில் எது உண்மை அல்ல ?

(A) உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டும் சொல்லின் முதலில் வரும்.
(B) உங்கு, உங்ஙனம் போன்ற சொற்களை இலங்கை தமிழர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.
(C) மெய்யெழுத்துக்கள் உயிர் எழுத்துக்களோடு சேர்ந்து உயிர்மெய் வடிவில் மொழிக்கு முதலில் வரும்.
(D) உயிர்மெய் எழுத்துக்களில் எட்டு வரிசைகள் சொல்லின் முதலில் வரும்.

11. மீனாட்சி சுந்தரனார் தொடர்பான கூற்றுகளில் எத்தனை சரி?
   1. புலமைக் கதிரவன் என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்படுபவர்.
   2. திருவாவடுதுறை ஆதீனம் மடத்தின் தலைமை புலவராக விளங்கியவர்.
   3. பல்வேறு வகை அந்தாதி பாடுவதில் சிறந்தவர்.
   4. இவரது காலம் : 1815 -1876

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

12. பொருத்துக.

| | |
|---|---|
| a. வால்ட் விட்மன் | - 1. சிலி |
| b. பாப்லோ நெரூடா | - 2. அமெரிக்கா |
| c. மல்லார்மே | - 3. பிரான்சு |

(A) 2, 1, 3
(B) 1, 3, 2
(C) 3, 2, 1
(D) 2, 3, 1

13. கவிஞர் இந்திரனின் படைப்புகளில் பொருந்தாதது எது?
(A) நவீன ஓவியம்
(B) முப்பட்டை நகரம்
(C) சாம்பல் வார்த்தைகள்
(D) மொழி அழகியல்

14. சு வில்வரத்தினம் தொடர்பான கூற்றுகளை ஆராய்ந்து, அதில் சரியானவற்றை தேர்ந்தெடு.
1. இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்.
2. இவரது கவிதை தொகுப்புகள் ‘உயிர்த்தெழும் காலத்துக்காக’ என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.
3. இவரது கவிதை தொகுப்பு 2001 இல் தொகுக்கப்பட்டது.
4. இவர் கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாக ஓவியம் வரையும் திறனும் உடையவர்.
(A) 1,2,3
(B) 2,3,4
(C) 1,3,4
(D) 1,2,4

15. பின்வருவனவற்றுள் பொருத்தமில்லாதது எது?
1. தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம் கூடில்லாத பறவை- இரசூல் கம்சதோவ்
2. என் காயத்தை வருடிச் சென்றது மின்னலென கடந்த தாய் மொழியின் அமுதிசை - இந்திரன்
3. உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே - பாரதிதாசன்
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) எதுவுமில்லை

16. பொருத்துக.

a. கனி+சாறு - 1. வினை வினைத்தொடர்

b. படித்த+நூல் - 2. பெயர் வினைத்தொடர்

c. தமிழ்+படி - 3. பெயர் பெர்யத்தொடர்

d. நடந்து+செல் - 4. வினைப் பெயர்த்தொடர்

(A) 2 1 3 4

(B) 1 3 2 4

(C) 3 4 2 1

(D) 2 3 1 4

17. நேரடி மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்று கூறியவர் யார்?

(A) இந்திரன்

(B) காசிரர்

(C) கா.சிவத்தம்பி

(D) ஆற்றூர் ரவி வர்மா

18. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. ஒரு நூலை புரிந்து கொள்ளவும் அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது.

2. நன்னூலில் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் குறித்து விளக்கப்பட்டுள்ளது

3. பாயிரம் ஏழு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

4. ஒரு நூலுக்கு பாயிரம் இல்லையேல் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.

மேற்கண்ட வாக்கியங்களில் எத்தனை சரி?

(A) 1

(B) 2

(C) 3

(D) 4

19. நன்னூலின் எழுத்து அதிகாரத்தில் பொருந்தாதது எது?

(A) பதவியல்

(B) பொதுவியல்

(C) உருபுப் புணரியல்

(D) எழுத்தியல்

20. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி.

1. இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்.
2. தற்போது கனடாவில் வசித்து வருபவர்.
3. மகாராஜாவின் ரயில் வண்டி எனும் நூலை எழுதியவர்.

மேற்கண்ட தகவல்களுக்கு பொருத்தமானவர் யார்?

(A) இந்திரன்
(B) சு. வில்வரத்தினம்
(C) அ. முத்துலிங்கம்
(D) கா. சிவத்தம்பி

21. பொருள் அறிக: எத்தனை இணைகள் சரி?

1. பால் - வகை
2. அமை - மூங்கில்
3. ஙனம் - பயன்
4. அத்தி - குரங்கு

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

22. பின்வருவனவற்றுள் எது/ எவை தவறு?

1. குற்றியலுகரமும் குற்றியலிகரமும் சொல்லின் முதலில் வராது.
2. சார்பெழுத்துக்களுள் ஆயுதம் சொல்லின் முதலிலோ இறுதியிலோ வராது.
3. குற்றியலுகரத்தின் ஆறு வகைகளும் சொல்லின் இறுதியில் வரும்.

(A) 1 மட்டும்
(B) 1, 3
(C) 3 மட்டும்
(D) எதுவுமில்லை

23. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. நாடற்றவன் | - | 1. சாண்டில்யன் |
| b. கடல் புறா | - | 2. சு.வில்வரத்தினம் |
| c. உயிர்த்தெழும் காலத்துக்காக | - | 3. கா.சிவத்தம்பி |
| d. தமிழின் கவிதையியல் | - | 4. அ.முத்துலிங்கம் |

(A) 2 4 1 3
(B) 4 1 2 3
(C) 4 3 2 1
(D) 2 3 4 1

24. பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரி?

கூற்று 1 : வெஞ்சின வேந்தன் பகை அலைக்கலங்கி வாழ்வோர் போகிய பேர் ஊர்ப் பாழ் - குறுந்தொகை

கூற்று 2: அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல் - புறப்பாட்டு

(A) 1, 2

(B) 1 மட்டும்

(C) 2 மட்டும்

(D) எதுவுமில்லை

25. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. பனைமரம் தமிழ்நாட்டின் மாநில மரம் ஆகும்.
2. இது ஏழைகளின் கற்பகவிருட்சம் என்று அழைக்கப்படுகிறது.
3. கிட்டத்தட்ட 11 ஆண்டில் இது பலன் தர ஆரம்பிக்கும்.
4. ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரை சேமித்து வைக்கும் தன்மை உடையது மற்றும் சிறந்த காற்று தடுப்பானாகவும் விளங்குகிறது.

மேற்கண்ட வாக்கியங்களில் எது/ எவை சரி?

(A) அனைத்தும்

(B) 1,2,3

(C) 2,3,4

(D) 1,2,4

26. கண்காணி - ஆராய்க.

1. இது பேச்சு வழக்கில் கங்காணி என்று பயன்படுத்தப்படுகிறது.
2. கங்காணம் என்பது பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல்.
3. இதன் பொருள் நாள்தோறும் வயலில் நெல் அறுவடை செய்து களத்தில் ஒப்படி செய்யும் நெல் அளவு ஆகும்.

மேற்கண்டவற்றில் எத்தனை சரி?

(A) 1

(B) 2

(C) 3

(D) எதுவுமில்லை

27. இலக்கணக்குறிப்பு காண்க : எத்தனை இணைகள் சரி?

1. ஆல் - அசைநிலை
2. ஆடுகம் - முன்னிலைப் பன்மை வினைமுற்று
3. ஐந்தும் - எண்ணும்மை
4. கண்ணி - அண்மை விளிச்சொல்

(A) 1
(B) 2
(C) 3
(D) எதுவுமில்லை

28. பொருத்துக.

a. மருதத்திணை - 1. அம்மூவனார்
b. குறிஞ்சித்திணை - 2. ஓதலந்தையார்
c. நெய்தல் திணை - 3. கபிலர்
d. பாலைத்திணை - 4. ஓரம்போகியார்

(A) 4 2 1 3
(B) 1 3 4 2
(C) 3 4 2 1
(D) 4 3 1 2

29. கீழ்க்கண்ட வாக்கியங்களை ஆராய்நது சரியற்ற ஒன்றை தேர்ந்தெடு.

(A) மனிதர்கள் தவிர்த்த மற்ற விலங்குகளில் யானை அதிக நாட்கள் வாழும் தரைவாழ் விலங்கு ஆகும்.
(B) அதிக ஞாபக சக்தி கொண்ட உயிரினம் ஆகும்.
(C) யானைகளில் நான்கு சிற்றினங்கள் மட்டுமே உலகில் தற்போது எஞ்சி உள்ளன.
(D) பொதுவாக எல்லா யானைகளும் ஏறத்தாழ 70 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.

30. திருமலை முருகன் பள்ளு தொடர்பான கூற்றுகளில் எது/எவை சரி?

1. இது பள்ளிசை என்றும் திருமலை அதிபர் பள்ளு என்றும் கூறப்படுகிறது.
2. இந்நூலில் கலித்துறை, களிப்பா, சிந்து ஆகிய பாவகைகள் வந்துள்ளன.
3. இதன் ஆசிரியர் மதுர கவிராயர் ஆவார்.

(A) 1,2
(B) 2,3
(C) 1,3
(D) 1,2,3

31. பொருள் அறிக: எத்தனை இணைகள் சரியல்ல?
   1. மஞ்ஞை - மேகம்
   2. கா - சோலை
   3. தரளம் - முத்து
   4. கொண்டல் - மலர்

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

32. நிகண்டுகளில் யானையை குறிக்கும் வேறு சொற்கள் : பொருந்தாதது எது?
   1. காரி
   2. அத்தினி
   3. மஞ்சனம்
   4. களபம்

(A) 1,2
(B) 3,4
(C) 1,3
(D) 2 மட்டும்

33. சரியான விடையைத் தேர்ந்தெடு.
   1. அச்சம் - உடனிலை மெய்ம்மயக்கம்
   2. உயர்ச்சி - வேற்றுநிலை மெய்ம்மயக்கம்
   3. உயர்வு - ஈரொற்று மெய்ம்மயக்கம்

(A) 1 மட்டும்
(B) 1,2
(C) 2,3
(D) 1,2,3

34. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. தமிழிசை இயக்கத்தின் தந்தை
   2. திண்டுக்கல்லில் ஆசிரியராக பணியாற்றியவர்
   3. சித்த மருத்துவத்தில் சிறப்பு பெற்றமையால் 'பண்டுவர் ' என்று மக்களால் அழைக்கப்பட்டவர்.

மேற்கண்ட கூற்றுகளுக்கு பொருத்தமான நபர் யார்?

(A) ஞானப்பதேசிகர்
(B) தாமோதரன் பிள்ளை
(C) ஆபிரகாம் பண்டிதர்
(D) மீனாட்சி சுந்தரனார்

35. மயங்கொலி சொற்கள் அறிக. (சரியற்றது எது)
   (A) ஒளி - பதுங்குதல்
   (B) களை - மூங்கில்
   (C) உழை - பெண்மான்
   (D) இளை - மெலிந்து போதல்

36. கலைச்சொல் அறிக.
   1. ஒட்டு விதை - Shell seeds
   2. அறுவடை - Irrigation
   3. வேர் முடிச்சுகள் - Root Knots
   4. தொழு உரம் - Bio fertilizer
   மேற்கண்டவற்றில் எத்தனை தவறு?
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) எதுவுமில்லை

37. கீழ்க்கண்ட தகவல்களில் எது சரியல்ல என்பதை தேர்ந்தெடு.
   (A) திராவிடர்களை மலைநில மனிதர்கள் என்று அழைக்கிறார் கமில் சுவலபில்.
   (B) சேயோன் மேய மைவரை உலகம் என்று கூறுகிறது தொல்காப்பியம்.
   (C) கடையெழு வள்ளல்கள் ஏழு பேருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர்.
   (D) விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ என்கிறது சிறுபாணாற்றுப்படை.

38. தென்னிந்தியாவில் மலை என்ற இடப்பெயரின் சிறப்பிடம்,
   1. தமிழ்நாட்டில் மட்டுமே மலை என்ற சொல் 17 இடப் பெயர்களில் முன்னொட்டாக வருகின்றது.
   2. ஆந்திர மாநிலத்தில் ‘ மல்’ என்ற வேர்ச்சொல் ‘மலே ‘ என்று வழங்கப்படுகின்றது.
   3. கர்நாடகத்தில் மலையை குறிக்கும் மற்றொரு சொல்லான ‘மலா’ 15 இட பெயர்களில் இடம் பெயர்கிறது.
   மேற்கண்டவற்றில் எது எவை சரி?
   (A) 1,2,3
   (B) 1 மட்டும்
   (C) 3 மட்டும்
   (D) 1,3

39. அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் அறிக.
   1. நூபுரத் துத்தொனி வெடிக்கும் ....
   2. உன்னத மாகிய இஞ்சி..
   (A) அழகு, தேவர்
   (B) புயல், மதில்
   (C) மரம், தோள்
   (D) சிலம்பு, மதில்

40. குறுந்தொகை,
   1. அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது.
   2. உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல்.
   3. இது இறுதியில் தொகுக்கப்பட்ட தொகை நூலாக கருதப்படுகிறது.
   4. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார்.
   (A) 1,2,3 சரி
   (B) 1,3,4 சரி
   (C) 1,2,4 சரி
   (D) 1,4 சரி

41. பாடல் அடிகளுக்கு ஏற்ற நூலில் சரியற்றது எது?
   1. தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதலவர் - குறுந்தொகை
   2. புலவர் போற்றும் திருமலைச் சேவகன் - குறிஞ்சிப்பாட்டு
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 1,2
   (D) எதுவுமில்லை

42. பின்வரும் வாக்கியங்களை கவனி.
   1. புறநானூற்று பாடல்கள் அனைத்துமே அகவற்பாக்களால் ஆனது.
   2. கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி புறநானூற்றுப் பாடலில் ஒரு பாடலை மட்டுமே இயற்றியுள்ளார்.
   3. இதனை பிற்காலத்தில் உ.வே.சா அவர்கள் 1874 ஆம் ஆண்டு முதன்முதலாக பதிப்பித்து வெளியிட்டார்.
   மேற்கண்ட வாக்கியங்களில் எது/எவை தவறு அல்லாதது?
   (A) 1,2
   (B) 2,3
   (C) 1,3
   (D) 1,2,3

43. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : ஒரு பகுபதத்தில் பகுதி, விகுதி, இடைநிலை என்பவையே பொருள் தரும் உறுப்புகள் ஆகும்.

கூற்று 2 : ஒரு சொல்லின் அடிச்சொல்லை, முதனிலை என்றும் கூறுவர்.

(A) கூற்று 1 சரி கூற்று 2 தவறு
(B) கூற்று 2 சரி கூற்று 1 தவறு
(C) கூற்று 1,2 சரி
(D) கூற்று 1,2 தவறு

44. பொருத்துக.

a. மார் - 1. தெரிநிலை பெயரெச்ச விகுதி
b. உம் - 2. முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி
c. ஐ - 3. படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி
d. இல் - 4. எதிர்மறை இடைநிலை

(A) 1 2 4 3
(B) 1 3 2 4
(C) 3 1 2 4
(D) 3 2 1 4

45. கீழ்க்கண்டவற்றில் பொருந்தாத தகவல் எது?

(A) 'தமிழ் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படுபவர் சி.வை. தாமோதரனார்
(B) 'தினவர்த்தமானி' என்னும் இதழின் நிறுவனர் பெர்சிவல் பாதிரியார்.
(C) காவடிச்சிந்துக்கு தந்தை என்று அழைக்கப்படுபவர் அண்ணாமலையார்.
(D) பள்ளு, சிந்துப்பாட்டு என்றும் அழைக்கப்படுகிறது.

46. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. ஒரு எழுத்து தோன்றுதலை விகாரம் என்றும் திரிதலையும் கெடுதலையும் சந்தி என்றும் கூறுவர்.
2. எழுத்துப்பேறு காலம் காட்டாது.
3. சந்தி வர வேண்டிய இடத்தில் உயிர் மெய் எழுத்து வந்தால் அதனை சாரியை என்று குறிப்பிடுவர்.

மேற்கண்ட கூற்றுகளில் எத்தனை சரி?

(A) 3
(B) 2
(C) 1
(D) எதுவுமில்லை

47. உரிய காலத்திற்கு காத்திருப்பவர் யார், என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?
(A) அரிய செயலை செய்ய நினைப்பவன்.
(B) தன் வலிமை அறிந்தவன்.
(C) உலகத்தை வெல்ல நினைப்பவன்.
(D) ஆசையை விட்டொழித்தவன்.

48. பின்வரும் வாக்கியங்களை கவனி.
1. மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு 800 மில்லி குருதி தேவைப்படுகிறது.
2. சராசரி மனித மூளையின் எடை 1439 கிராம்.
3. மிக அதிக எடையுள்ள மனித மூளை 2049 கிராம்.
4. மனித மூளை சுமார் 10 வாட் சக்தியை உற்பத்தி செய்கிறது.
மேற்கண்டவற்றில் எது/எவை சரி?
(A) அனைத்தும்
(B) 1,3,4
(C) 2,3,4
(D) 1,4

49. பின்வரும் வாக்கியங்களை ஆராய்ந்து தவறான ஒன்றை தேர்ந்தெடு.
(A) 'உங்கள் உடலின் முக்கிய பணி உங்கள் மூளையை தாங்கிச் செல்வதே' என்று கூறியவர் தாமஸ் ஆல்வா எடிசன்.
(B) நம்முடைய பேச்சுத்திறமை, நம் மூளையின் இடது முன்பகுதிச்சொல்லையில் இருக்கிறது என்று கண்டுபிடித்தவர், பியர் பால் ப்ரோக்கோ.
(C) நாம் பிறக்கும் போதே சில ஆழ்ந்த அமைப்புகளுடன் பிறக்கிறோம். இதில் இலக்கண விதிகளும் அதனை அர்த்தம் புரிந்துகொள்ளும் திறமையும் உள்ளது என்று கூறியவர் - ஆட்டோ டியட்டர்ஸ்.
(D) மனம் என்பது மூளையில் இருக்கிறது என்று கூறியவர், பித்தகோரஸ் ஆவார்.

50. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : தமிழ்நாட்டில் நடந்த முதல் கவியரங்கம் ' எழில்' எனும் தலைப்பில் நடந்தது.
கூற்று 2 : இது 1944 இல், சென்னை வானொலி நிலையத்தில் தமிழ் புத்தாண்டு நாளை ஒட்டி ஒலிபரப்பப்பட்டது.
மேற்கண்ட கூற்றுகளில் எது சறியற்றது?
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1,2
(D) எதுவுமில்லை

51. பின்வரும் பாடல் வரிகளுக்கு ஏற்ற நூல்களில் சரியாகப் பொருந்தி உள்ளது எது/எவை?
   1. யாதினு மாழ்கும்அம் மாழ்கியும்... - நீலகேசி
   2. வாய்த்துரை ஈதென வாமன்இது... - நீலகேசி
   3. களிறுகவுள் அடுத்த எறிகல் போல... - புறப்பாட்டு
(A) 1, 2
(B) 1, 3
(C) 2, 3
(D) 1, 2, 3

52. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. உலகில் 5 கோடி மக்கள் தொகையுடன் நீரிழிவு நோய் அதிகம் கொண்ட நாடாக இந்திய நாடு உள்ளது.
   2. உலகத்திலேயே இரண்டாம் வகை நீரிழிவு குறைபாடு அதிகமுடைய நாடு இந்திய நாடு.
   3. இரண்டாம் வகை நோய் என்பது இன்சுலின் சார்ந்த நீரிழிவு நோய் ஆகும்.

மேற்கண்ட வாக்கியங்களில் எது/எவை தவறு?
(A) 2 மட்டும்
(B) 3 மட்டும்
(C) 1, 3
(D) எதுவுமில்லை

53. பெ.நா. அப்புசாமி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எத்தனை சரி?
   1. தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்தவர்.
   2. அறிவியல் தமிழுக்காக 70 ஆண்டுகள் தொண்டாற்றியவர்.
   3. மதுரை பல்கலைக்கழகம் இவரை பாராட்டி ‘ தமிழ் அறிவியல் செம்மல்’ என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.
   4. இவர் ‘அறிவியல் தமிழர்’ என்று பலராலும் போற்றப்படுகிறார்.
(A) 4
(B) 3
(C) 2
(D) 1

54. கீழ்க்கண்ட கூற்றை கவனி

வாக்கியம் 1 : இரத்தச் சிவப்பணுக்களில் ஹீமோகுளோபின் அதிக அளவில் காணப்படுகிறது.

வாக்கியம் 2 : இரத்தச் சிவப்பணுக்களின் பிறப்பிடம் எலும்பு மஜ்ஜை ஆகும்.

மேற்கண்ட வாக்கியங்களை எது/எவை சரி?
(A) 1,2
(B) 1 மட்டும்
(C) 2 மட்டும்
(D) எதுவுமில்லை

55. பொருத்துக. (நூல் - நூலாசிரியர்)

a. வாடிவாசல் - 1. வா.செ. குழந்தைசாமி
b. அறிவியல் தமிழ் - 2. சி. சு. செல்லப்பா
c. பறவை உலகம் - 3. அ. முத்துலிங்கம்
d. நாடற்றவன் - 4. சலீம் அலி

(A) 3 2 4 1
(B) 2 1 4 3
(C) 3 2 1 4
(D) 1 2 4 3

56. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.

1. எழுத்தும் இலக்கியமும் கணக்கும் கற்பிப்போர் கணக்காயர் என்பர்.
2. சமய நூலும் தத்துவ நூலும் கற்பிப்போர் ஆசிரியர் என்பர்.
3. தொல்காப்பியமும் நன்னூலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன.

மேற்கண்டவற்றில் எது/ எவை சரி?

(A) 1,2
(B) 2,3
(C) 1,3
(D) அனைத்தும்

57. கல்வி கற்பிக்கப்படும் இடங்களை எவ்வாறு குறிப்பிடுகின்றனர்.

1. ஓதும் பள்ளி என்று பெரிய திருமொழி
2. பள்ளி என்று திவாகர நிகண்டு
3. கல்லூரி என்று சீவக சிந்தாமணி

மேற்கண்ட வாக்கியங்களில் எவை சரி?

(A) 1,2
(B) 2 மட்டும்
(C) 1,3
(D) 3 மட்டும்

58. பொருந்தாத இணை எது?

(A) 1857- சென்னை பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
(B) 1835- சென்னை பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டது.
(C) 1910- தமிழ்நாடு இடைநிலை கல்வி வாரியம் தொடங்கப்பட்டது.
(D) 1911- மாநில அளவிலான பொதுத் தேர்வு நடைமுறைக்கு வந்தது.

59. இரா.மீனாட்சி எழுதிய கவிதை தொகுப்புகளில் பொருந்தாதது எது/ எவை?

1. சுடுபூக்கள்
2. நெடிய பயணம்
3. வாசனைப்புல்
4. அகல் விளக்கு

(A) 1,3
(B) 2,4
(C) 2 மட்டும்
(D) எதுவுமில்லை

60. அருஞ்சொற்பொருள் காண்க.

1. பிரசம்
2. கொழுநன்
3. மதுகை

(A) தேன், கணவன், பெருமிதம்
(B) வறுமை, பகைவன், வலிமை
(C) வலி, செல்வம், பெருமிதம்
(D) தேன், பகைவன், நினைவு

61. நற்றினை குறித்த தகவல்களில் சரியானதை தேர்ந்தெடு.

1. எட்டுத்தொகையில் முதலாவதாக வைத்து பாடப்படும் நூல்.
2. இது 400 பாடல்களைக் கொண்டது.
3. 9 அடி சிற்றெலை, 12 அடி பேரல்லை உடையது.
4. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் இளம்வழுதி.

(A) 1, 2, 3
(B) 2, 3, 4
(C) 1, 3, 4
(D) அனைத்தும்

62. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : நமக்கு கிடைத்த தமிழ் நூல்களில் காலத்தால் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும்.
கூற்று 2: மூன்று அதிகாரங்களையும் ஒன்பது இயல்களையும் கொண்ட நூல்.
மேற்கண்ட கூற்றுகளில் எது தவறு?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

63. பாரதியார் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எத்தனை சரி?

1. சுதேசிமித்திரன் இதழில் முதன் முதலில் ஆசிரியராக பொறுப்பேற்றார்.
2. இந்தியா, விஜயா ஆகிய இரு இதழ்களிலும் கருத்து படங்களை வெளியிட்டுள்ளார்.
3. 'சித்திராவளி ' என்ற பெயரில் கருத்து படங்களை மட்டுமே கொண்ட இதழ் ஒன்றையும் நடத்தினார்.
4. அவருடைய புனைப்பெயர்கள்: நித்திய தீரர், கண்ணம்மா, காசி, சி.சு. பாரதி, ரிஷிகுமாரன் முதலியன.

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

64. கீழ்க்கண்ட வாக்கியங்களை ஆராய்க.

1. உவமையையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபடுத்தாமல் இரண்டும் ஒன்று எனக் கூறுவது உருவகமாகும்.
2. உருவகத் தொடரில் உவமேயம் முன்னும், உவமை பின்னும் வரும்.
3. வமேயத்தின் செறிவார்ந்த வடிவமே உருவகம்.

மேற்கண்ட வாக்கியங்களில் எது, எவை சரி?

(A) 1, 2, 3
(B) 1, 2
(C) 2, 3
(D) 1, 3

65. உள்ளுறை உவமம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது தவறு?

1. அகமாந்தரின் மன உணர்வுகளை கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவது உள்ளுறை உவமம் என்பர்.
2. இது வினை, பயன் போன்ற அடிப்படைகளில் தோன்றும்.
3. குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

66. ஜி.யு.போப் தொடர்பான பின்வரும் கூற்றுக்களை ஆராய்ந்து சரி அல்லாததை தேர்வு செய்.
   1. இவர் 1838 ஆம் ஆண்டில் தென்னிந்தியாவுக்கு வந்தார்.
   2. ஐரோப்பியர் தமிழ் மொழியை கற்றுக்கொள்ள நூல் ஒன்றை எழுதினார்.
   3. செந்தமிழ் பேரவைச் செம்மல் என்று அழைக்கப்படுகிறார்.
   4. இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

(A) 1, 2
(B) 1, 3
(C) 2 மட்டும்
(D) 1 மட்டும்

67. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.
   1. பாரதியார் பெண்களுக்காக தமது சக்கரவர்த்தினி இதழில் குறள் வெண்பா எழுதியுள்ளார்.
   2. அவர் இந்தியா இதழை, சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்டார்.
   3. இந்தியா இதழானது, வெள்ளிக்கிழமை தோறும் வெளியானது.
   4. தமிழ் இதழ்களில் தமிழ் மாதம், ஆண்டு குறிப்பிடும் முறையை கையாண்டதில் ஆம் முன்னோடி பாரதியாவார்.

மேற்கண்டவற்றில் எது/ எவை சரி?
(A) 1, 2, 3
(B) 2, 3, 4
(C) 1, 2, 4
(D) அனைத்தும்

68. தொல்காப்பியம்- சிறப்புப்பாயிர உரை விளக்கப் பாடல் தொடர்பான கூற்றுகளில் எது தவறு?
(A) மாணவர்கள் எவ்வாறு கற்க வேண்டும் என்பதை சிறப்பு பாயிர உரைவிளக்கப் பாடல் விளக்குகிறது.
(B) சிறப்புடைய மாணவர் எனப்படுவோர் உலக வழக்கு, நூல் வழக்கு இலக்கணங்களை ஆசிரியர்களிடம் குற்றமின்றி அறிவர்.
(C) ஆசிரியர் கூறும் கருத்துக்களை ஒரு முறைக்கு இருமுறை கேட்கும் மாணவர்கள், தங்கள் ஐயங்களை ஆசிரியர்களிடம் வினவி தெளிவு பெறுவர்.
(D) ஒரு முறைக்கு மூன்று முறை கேட்போர் பாடக் கருத்துக்களை பிறருக்கு முறையாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவர்.

69. கீழ்க்கண்ட கூற்றை கவனி
    1. சங்ககாலப் புலவர்களில் ஒருவர்.
    2. நற்றிணையில் 110ஆம் பாடலை மட்டும் பாடியுள்ளார்.
    3. நற்றிணையில் பேரெல்லை 12 அடி, இருப்பினும் விதிவிலக்காக 13 அடிகளைக் கொண்டதாக பாடியுள்ளார்.

    யார் இவர்?

    (A) பேயனார்
    (B) போதனார்
    (C) நப்பூதனார்
    (D) இளம்பூரணர்

70. பொருந்தா இணை எது?
    1. 1835 - ஆடம்ஸ் கல்விக் குழு
    2. 1854 - சார்லஸ் வுட் குழு
    3. 1882 - ஹண்டர் கல்விக்குழு

    (A) 1 மட்டும்
    (B) 2 மட்டும்
    (C) 3 மட்டும்
    (D) எதுவுமில்லை

71. கீழ்க்கண்ட கூற்றை கவனி
    1. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே - புறநானூறு
    2. ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டிமன்றத்து பாங்கறிந்து ஏறுமின் - சிலப்பதிகாரம்.
    3. கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்- திரிகடுகம்.

    மேற்கண்ட வாக்கியங்களில் சரியாகப் பொருந்தாத ஒன்று எது?

    (A) 1 மட்டும்
    (B) 2 மட்டும்
    (C) 3 மட்டும்
    (D) எதுவுமில்லை

72. கீழ்க்கண்ட கூற்றை கவனி

    கூற்று 1 : தொல்காப்பிய நூலுக்கு முதன் முதலில் நச்சுனாக்கினியர் உரை எழுதியுள்ளார்.

    கூற்று 2: தொல்காப்பிய நூலானது 1847 இல் முதன்முறையாக பதிக்கப்பட்டது.

    மேற்கண்ட கூற்றுகளில் எது தவறு?

    (A) 1 மட்டும்
    (B) 2 மட்டும்
    (C) 1,2
    (D) எதுவுமில்லை

73. பொருந்தாத இணை எது?
(A) பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையளே - நற்றிணை
(B) நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர் - குறுந்தொகை
(C) நும்மினும் சிறந்தது அவ்வை ஆகும் - நற்றிணை
(D) யாதினு மாழ்கும்அம் மாழ்கியும் - குறுந்தொகை

74. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி.
1. 1453 ஆம் ஆண்டில் ஜான் கூட்டன்பர்க் வடிவமைத்த அச்சு இயந்திரம் கல்வி பெருக ஒரு காரணமாக இருந்தது.
2. இந்தியாவில், தரங்கம்பாடியில் முதன் முதலில் அச்சுகூடத்தினை ஏற்படுத்தினர்.
3. இந்தியாவில் முதன் முதலில் அச்சில் ஏறிய மொழி தமிழே ஆகும்.
4. 1823 ஆம் ஆண்டு சாசன சட்டப்படி, லண்டன் பாராளுமன்றம் இந்தியர்களின் கல்விக்காக ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியது.

மேற்கண்ட வாக்கியங்களில் எது/எவை தவறு இல்லாதது?
(A) 1, 2, 3
(B) 2, 3, 4
(C) 2, 3
(D) 2, 4

75. அறிவியல் தமிழர் எழுதிய நூல்களில் பொருந்தாதது எது?
1. வானக்காட்சி
2. மின்சாரம்
3. அணுக்கருவின் எதிர்காலம்
4. ராக்கெட்டும் தொழில்நுட்பமும்
(A) 1, 3, 4
(B) 1, 3
(C) 1, 2
(D) அனைத்தும்

76. பொருத்துக. (புணர்ச்சி)

| | | |
|---|---|---|
| a. ஆதி நீடல் | - | 1. பைந்தளிர் |
| b. முன் நின்ற மெய் திரிதல் | - | 2. காரிருள் |
| c. இனமிகல் | - | 3. செங்கதிர் |
| d. அடி அகரம் ஐ ஆதல் | - | 4. பெருங்கொடை |

(A) 2 4 3 1
(B) 2 3 4 1
(C) 3 4 2 1
(D) 2 1 3 4

77. கீழ்க்கண்ட தகவல்களை ஆராய்ந்து எத்தனை சரி என்பதை தேர்வு செய்.

1. நாயின் கணையத்திலிருந்து இன்சுலினை பிரித்தெடுப்பதில் வெற்றி பெற்றவர் பிரடேரிக் பாண்டிங்.
2. கணையத்தில் உள்ள லாங்கர்ஹான் திட்டுகளை ஆராய்ந்தவர், சர் எட்வர்ட் ஆல்பர்ட் சார்பே.
3. சர்க்கரைக்கும் கணையத்துக்கும் உள்ள தொடர்பை முதன்முதலாக அறிவித்த அறிவியல் அறிஞர்களுள் ஒருவர், ஆஸ்கர் மின்கோஸ்கி.
4. இணையத்தில் ஒரு வேதிப்பொருள் குறைவதை கண்டறிந்து அந்த வேதிப் பொருளுக்கு இன்சுலின் என்று பெயரிட்டவர், ஜோசப் வான் மேரிங்.

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

78. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : உலக நீரிழிவு நோயானது 1991 முதல் நவம்பர் 24 அன்று அனுசரிக்கப்படுகிறது.

கூற்று 2: இது சார்லஸ் பெஸ்ட் என்பவரின் பிறந்தநாள் ஆகும்.

மேற்கண்ட கூற்றுகளில் எது தவறு அன்று?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

79. இலக்கணக்குறிப்பு : சரியான இணைகள் எத்தனை?

1. தகாஅர் - இசைநிறை அளபெடை
2. பெருவழி - உருவகம்
3. அறிவும் ஒழுக்கமும் - உம்மைத் தொகை
4. பொற்கலம் - பண்புத்தொகை

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

80. நீலகேசி தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து எது/எவை தவறு என தேர்வு செய்.
 1. விருத்தப்பாவால் ஆனது.
 2. வளையாபதி நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டது.
 3. தமிழில் எழுதப்பட்ட முதலாவது சமய நூல்.
 4. இதில் கடவுள் வாழ்த்து உட்பட 894 பாடல்கள் உள்ளன.

(A) 2 மட்டும்
(B) 2, 3
(C) 4 மட்டும்
(D) அனைத்தும்

81. கீழ்க்கண்ட தகவல்களில் எது சரியற்றது?
(A) ஒளியின் திசைவேகத்தை உலகிற்கு வெளிப்படுத்தியவர் ரோமர்.
(B) பியரி கேசண்டி என்பவர், ஒலியின் திசைவேகத்தை வெளிப்படுத்தியவர்.
(C) ஒளியின் திசைவேகம் 3*10^9 மீ/வி.
(D) ஒலியின் திசைவேகம் 331 மீ/வி.

82. சொல்லும் பொருளும் : தவறான இணை எது?
 1. வாமன் - முருகன்
 2. தேறு - தெளிவாக
 3. சேதனை - ஐயம்
 4. அரும்புதல் - பருத்தல்

(A) 1 மட்டும்
(B) 4 மட்டும்
(C) 1, 3
(D) 1, 4

83. கீழ்க்கண்ட கூற்றை கவனி
 1. சுஜாதாவின் இயற்பெயர் ராஜராஜன்.
 2. இவர் அறிவியலை எளிய தமிழ் ஊடகங்களில் பரப்பியதற்காக மத்திய அரசின் விருது பெற்றவர்.
 3. கணிப்பொறியின் கதை, முதல் நூற்றாண்டு, மீண்டும் ரோபோ போன்றவை இவருடைய புகழ்பெற்ற அறிவியல் நூல்களாகும்.
 4. இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு கருவியை கொண்டு வந்ததில் இவருடைய பங்களிப்பு அதிகம்.

மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரி ?
(A) 1, 2, 4
(B) 2, 4
(C) 1, 4
(D) 2, 3, 4

84. கீழ்க்கண்ட கூற்றுக்களை ஆராய்க.

1. 'மனமும் மூளையும் வேறு' என்று கூறியவர் டெஸ்கார்டஸ்.
2. 'மொழியறிவு மூளைக்குள் பதிந்திருக்கிறது ' என்று கண்டறிந்தவர் நோம் சோம்ஸ்கி.

(A) 1 சரி 2 தவறு
(B) 1 தவறு 2 சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் தவறு

85. திருக்குறளில் விடுபட்ட சீருக்கான சரியான விடையை கண்டறி.

"யாதனின் யாதனின் _____ நோதல்
அதனின் அதனின் இலன்"

(A) அடங்கியான்
(B) நீங்கியான்
(C) உயிர்வாழ்வான்
(D) வாழ்வான்

86. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : ஒரு பாடலை முதலிலிருந்து நோக்கினாலும் முடிவில் இருந்து நோக்கினாலும் அதே எழுத்துக்கள் அமைந்த பாடலாக வருவது மாலைமாற்று எனப்படும்.

கூற்று 2: மாலைமாற்று, வித்தாரக்கவி வகைகளில் எளிமையானது.

மேற்கண்ட கூற்றுகளில் எது தவறு அன்று?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

87. கலைச்சொல் அறிக.

1. இனக்குழு - Cultural group
2. செம்மொழி - Ethnic language
3. மென்பொருள் - Application

மேற்கண்டவற்றில் எது/ எவை சரி?

(A) 1, 2
(B) 1 மட்டும்
(C) 2, 3
(D) எதுவுமில்லை

88. சி.வை.தாமோதரனார் தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து அதில் சரியானதை தேர்ந்தெடு.

1. காலம் : 1832 - 1901
2. தனது இருபதாவது வயதில் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதிப் பதிப்பித்தார்.
3. புதுக்கோட்டை உயர் நீதிமன்ற நீதிபதியாக, 1884 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.
4. இவர் நட்சத்திரமாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

(A) 1, 2, 3
(B) 1, 3, 4
(C) 1, 3
(D) அனைத்தும்

89. காணலன் = காண்+ அல்+ அன். இதில் ‘ அல் ‘ என்பது,

(A) இறந்தகால இடைநிலை
(B) நிகழ்கால இடைநிலை
(C) எதிர்மறை இடைநிலை
(D) எதிர்கால இடைநிலை

90. சி.சு.செல்லப்பா தொடர்பான தகவல்களை ஆராய்ந்து சரியானது எத்தனை என தேர்வு செய்.

1. இதழ்களில் உதவி ஆசிரியர் : சந்திரோதயம், தினமணி
2. தொடங்கிய இதழ் : எழுத்து
3. சாகித்திய அகாடமி : சுதந்திர தாகம் ( 2001)
4. படைப்புகள் : ஜீவனாம்சம், தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது.

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

91. புறநானூறு மொழிபெயர்ப்பு,

1. The Four Hundred and five songs of war and wisdom: An anthology of poems from classical Tamil, the purananuru - ஜார்ஜ் எல். ஹார்ட்
2. Extracts from purananuru and purapporul venbamalai - ஜி.யு. போப்

மேற்கண்டவற்றில் இது எவை சரி?

(A) 1, 2
(B) 1 மட்டும்
(C) 2 மட்டும்
(D) எதுவுமில்லை

92. தவறானது எது? (பாடல் வரிகள்: நூல்)
   1. உண்டால் அம்ம இவ்வுலகம் - புறம்
   2. ஆய மகள் அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் - நற்றிணை
   3. தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதலவர் - குறுந்தொகை
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 1,3
   (D) எதுவுமில்லை

93. சென்னிகுளம் அண்ணாமலையார் குறித்த தகவல்களை ஆராய்ந்து தவறாக உள்ளதை சுட்டிக்காட்டு.
   (A) அருணகிரியாரின் திருப்புகழ் தாக்கத்தால் காவடி சிந்து என்ற சந்த இலக்கியத்தை இயற்றினார்.
   (B) தமிழில் முதன் முதலில் வண்ணச்சிந்து பாடியவர்.
   (C) 18 வயதிலேயே இருதயாலய மாறவர்ம தேவரின் அரசவைப் புலவராக இருந்தவர்.
   (D) காவடிச்சிந்துவின் மெட்டுக்கள் இவராலேயே அமைக்கப்பட்டது.

94. ஆர். பாலகிருஷ்ணன் சார்ந்த கீழ்காணும் வாக்கியங்களை ஆராய்ந்து சரியற்றதை தேர்வு செய்.
   1. கணையாழி நாளிதழில் துணைஆசிரியராக பணியாற்றியவர்.
   2. 1984 ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணி தேர்வை, முதன் முதலில் முழுவதுமாக தமிழிலேயே எழுதி முதல் முயற்சியில் தேர்ச்சி பெற்றவர்.
   3. இவருடைய படைப்புகள் : அன்புள்ள அம்மா, சிறகுக்குள் வானம் போன்றவை.
   (A) 1 மட்டும்
   (B) 3 மட்டும்
   (C) 2, 3
   (D) எதுவுமில்லை

95. பொருத்துக. (திராவிட சொற்கள் - மாநிலம்)
   a. மலை - 1. பஞ்சாப்
   b. மலா - 2. குஜராத்
   c. வரை - 3. ஜார்கண்ட்
   d. மலே - 4. கர்நாடகா
   (A) 4 2 1 3
   (B) 4 2 3 1
   (C) 3 1 2 4
   (D) 3 1 4 2

96. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களை புனித இடமாக கருதுவார்கள்.
2. குறும்பர் மொழியில் தாழ்வாரத்தை குறிக்கும் ‘திண்டு’ என்ற சொல் உயரமான மேடான அமைப்பை விளக்குகின்றது.
3. ஆந்திராவில் உள்ள ‘ஜதாப்பு’ எனப்படும் திராவிட பழங்குடியினரின் குடியிருப்புகள் மலை உச்சிகளில் அமைந்துள்ளன.

மேற்கண்டவற்றில் உள்ள தகவல்களில் எது உண்மையற்றது ?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) எதுவுமில்லை

97. ஆபிரகாம் பண்டிதர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது தவறு?

(A) பண்டைய தமிழ் நூல்களை ஆழ்ந்து கற்று ‘சங்கீத வித்யா மகாஜன சங்கம்’ எனும் அமைப்பை உருவாக்கினார்.
(B) பல்வேறு தமிழிசை மாநாடுகளை தன் சொந்த செலவில் கும்பகோணத்தில் நடத்தினார்.
(C) அவரது இசைத்தொண்டில் முக்கிய படிப்பு ‘ கருணாமிர்த சாகரம்’.
(D) இவரது காலம்: 1859 - 1930

98. பிழையான தொடரை கண்டறிக.

(A) தமிழகக் கோவில் யானைகளுக்கு வனப் புத்துணர்ச்சி திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் வி. கிருஷ்ணமூர்த்தி.
(B) டாக்டர் கே. அவர்களுக்கு வனப்பேணுநர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான வேணுமேனன் ஏலிஸ் விருது 2000இல் பெற்றார்.
(C) யானையை பாத்திரமாக வைத்து ஊமைநாய் எனும் கதையை எழுதியவர் ஜெயமோகன்.
(D) யானைகள் வெகு தொலைவில் உள்ள நீரினை கூட வாசனை மூலம் அறிந்து கொள்ளும்.

99. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : பள்ளு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

கூற்று 2: இது தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.

மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரி?

(A) 1, 2
(B) 1 மட்டும்
(C) 2 மட்டும்
(D) எதுவுமில்லை

100. பிழையற்ற இணைகள் எத்தனை ? (கவிதை வரிகள் - கவிஞர்)

1. தூக்கணாங்குருவிக் கூடுகள் காற்றில் ஆடும் புல் வீடுகள் - அரவிந்தன்.
2. உலகை உயரத்தில் உண்மையிலேயே தூக்கி வைக்கப் பலகை கொடுத்தவன் யார்? - மீரா
3. பலமலை குன்றைச் சுற்றி போய்விழும் ஓடை போலத் தோன்றிடும் - வண்ணதாசன்
4. தாய் மொழியிலேயே பயின்று யாதும் ஊரென உலகின் உறவாகவே விரும்புகிறேன் நான் - இரா.மீனாட்சி

(A) 4
(B) 3
(C) 2
(D) 1

******

மனித நேயம் வளர்ப்போம் • மானுடம் மீட்போம்
சைதை சா. துரைசாமியின் மனித நேய அறக்கட்டளை